**தென்னை ஆராய்ச்சி சபை – 2017**

-----------------------------------------------------

தென்னை ஆராய்ச்சி சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 43 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு 2018 மே 18 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து தென்னை ஆராய்ச்சி சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை அரசாங்கத்துறை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் 48 ஆம் பந்தியின் பிரகாரம் தேவை ஏற்படுகின்ற அல்லது அனுமதியளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைத் தவிர்த்து சொத்துக்களும் பொறுப்புக்களும் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யலாகாது என்ற போதிலும் ஏனைய நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விழாமுற்பணங்கள் மற்றும் விசேட சம்பள முற்பணங்களிலுள்ள முறையே ரூபா 68,475 மற்றும் ரூபா 90,865 தொகைகளான மறை மீதிகள் எதிரீடு செய்யப்பட்டு தேறிய மீதியான ரூபா 467,519 மற்றும் ரூபா 181,581 தொகைகள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

(i) நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டுள்ள ரூபா 6,190,814 நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் காசுப்பாய்சல் கூற்றில் காசு அற்ற மாற்றங்களின் கீழ் ரூபா 6,904,083 ஆகக் காட்டப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சல் ரூபா 713,269 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் நிலையான வைப்புக்களுக்காக காசாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட வட்டி வருமானம் ரூபா 5,011,893 ஆக இருந்த போதிலும் ரூபா 6,190,814 ஆக முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

(i) நியமத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை ஆதனம், பொறி, உபகரணம் என்பன மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,522,283,874 கிரயமுள்ள காணிகள் சபையினால் 2005 ஆம் ஆண்டின் பின்னர் மீள்மதிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களுக்கான வினைத்திறன் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 208,560,016 தொகையான ஆதனம் மற்றும் பொறி முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன. அதற்கிணங்க மதிப்பீடுசெய்யப்பட்ட தவறுகளை இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான தப்போவ ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள 5 ஏக்கர் காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு தொடர்பாக பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 507,637 தொகை நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) கடந்த ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 6,616,827 வெளிநாட்டு உதவி மீளாய்வாண்டின் வருமானமாக நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயங்களுக்கும் எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| கடன்பட்டோர் | 7,541,354 | மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதம் |
| கடன்கொடுத்தோர் | 1,916,781 | |
| நூல் நிலையப் புத்தகங்களும் பருவகாலச் சஞ்சிகைகளும் | 3,055,587 | வருடாந்த இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |
| ஆய்வு கூட உபகரணங்கள் | 2,357,168 | |

## 2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 7,750,786 தொகையான கடன்பட்டோர்களில் ரூபா 539,737 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடாது காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட 13 நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 245,650 தொகையான பாதுகாப்பு வைப்பு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டதுடன் அதனை அறவீடு செய்வதற்கு சபையினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் இரண்டு காசேடுகளுக்கிடையே ரூபா 126,000 தொகையான பற்றுச்சீட்டுக்களை பதிவுசெய்யும் போது இடம்பெற்ற தவறை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வழிக்காசாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2012 ஆம் ஆண்டில் புதிய அலுமினியக் கதவுகளுக்காக வழங்கப்பட்டுள்ள ரூபா 159,936 வேலைக்கு முன்னரான முற்பணம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 20 தனியார் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்படும் ரூபா 407,286 நிறுத்திவைத்தல் பணமும் செஸ் நிதியத்திலிருந்து நிறுத்திவைத்த ரூபா 424,352 மீதியும் பல ஆண்டுகளாக தீர்த்துவைக்கப்படாது முன்கொண்டு வரப்பட்டன.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | நிதி மற்றும் வெகுசனத் தொடர்பு அமைச்சின் 2017 திசெம்பர் 11 ஆந் திகதிய பீஈடி 03/2017 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை | மிகையூதியக் கொடுப்பனவாக தோட்ட முகாமைத்துவ பிரிவின் 36 நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு ரூபா 10,000 வீதம் ரூபா 360,000 செலுத்த வேண்டிய போதிலும் சுற்றறிக்கைக்கு மாற்றமாக பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உரிய ஊழியர்களின் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ரூபா 883,272 மொத்த தொகை மிகையூதியமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2008 மார்ச் 03 ஆந் திகதிய 1/2008 ஆம் இலக்க திறைசேரி செயற்பாட்டுச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | அரசாங்கத்திற்கு நேரடியாகவும் சுழற்சி முறையிலும் நிதியத்தை வழங்கின்ற நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்திற்கு நேரடியாகவும் சுழற்சி முறையிலும் இறுதிப் பொறுப்புக்களை ஒப்படைத்த நிதியங்களின் நடவடிக்கைகள் சம்பந்தமாக தேசிய பொருளாதாரத்திற்கு மிகவும் சிறந்த பெறுபேறுகளை வழங்குகின்ற முறையான முதலீட்டு நடைமுறை பின்பற்றப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 08 மில்லியனுக்கும் ரூபா 103 மில்லியனுக்கும் இடைப்பட்ட மீதி பயன்படுத்தப்படாது 4 வங்கி நடைமுறைக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 26,752,992 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்காக மிகை ரூபா 28,733,096 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 1,980,104 வீழ்ச்சியாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆராய்ச்சி நிலைய வருமானம் ரூபா 13,740,363 ஆல் அதிகரித்திருந்தும் சம்பளம் மற்றும் கூலி நலச் செலவுகள் ரூபா 15,471,987 ஆல் அதிகரித்தமை மேற்கூறிய வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளுக்கான நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 40,702,143 தொகையான மிகை 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 70,181,762 வரை அதிகரித்திருந்தும் 2015 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தும் 2017 ஆம் ஆண்டளவில் மிகை ரூபா 26,752,992 வரை குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட வரி என்பவற்றை மீண்டும் செம்மையாக்கிய போது 2013 ஆம் ஆணடின் போது ரூபா 211,637,093 தொகையான பங்களிப்பு முரண்களுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 251,806,285 வரை அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதாணிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நடைமுறை விகிதம் 1:1.74 இலிருந்து 1:1.35 வரை குறைவடைந்திருந்ததுடன் திரவ சொத்துக்கள் விகிதம் 1:1.33 இலிருந்து 1:0.96 வரை குறைவடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் இலாப விகிதம் 5.5 சதவீதத்திலிருந்து 5.04 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

## 3.3 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட சம்பவங்கள்

சபையினால் 09 வெளி நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு எதிராக ரூபா 15,629,888 இழப்பீடு கோரி 09 நீதிமன்ற வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் வெளித்தரப்பினர்களால் சபைக்கு எதிராக 03 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்திறனும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான 10 தோட்டங்களில் 2016 ஆம் ஆண்டில் 5,689,864 தேங்காய்கள் ஆன தேங்காய் விளைச்சல் மீளாய்வாண்டளவில் 31 சதவீதமாக 3,917,072 தேங்காய் வரை குறைவடைந்திருந்தது. அவ்வாறே ஒரு ஏக்கருக்கான சராசரி வருடாந்த தேங்காய் விளைச்சல் 2400 தேங்காய்களுக்கும் 3000 தேங்காய்களுக்கும் இடையே இருக்க வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான 10 தோட்டங்களில் 05 தோட்டங்களின் தேங்காய் விளைச்சல் அதற்கு குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் ஒரு மரத்தின் சராசரி வருடாந்த தேங்காய் விளைச்சல் 60 தேங்காய்களாக இருக்க வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான 5 தோட்டங்களில் ஒரு மரத்திற்கான வருடாந்த சராசரி விளைச்சல் 21 தேங்காய்களிலிருந்து 48 தேங்காய்கள் வரையான வீச்சுடையதாகும்.

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சபையினால் மீளாய்வண்டின்போது ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 543,000 ஆன 02 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டில் பூர்த்திசெய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த ரூபா 7,617,000 மதிப்பீட்டுக் கிரயமான 16 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் செயலாற்றல் மட்டம் 10 சதவீதத்திற்கும் 08 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சுடையதாக இருந்தது. இதற்கு பிரதானமாக உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை, இரசாயன திரவியங்கள் கிடைக்காமை, ஆய்வுகூட உபகரணங்களை கொள்வனவு செய்வதில் தாமதம் என்பன காரணமாக இருந்தன.

(இ) நூல் நிலையம் பொறியியல் சேவை பிரிவின் 03 உட்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 4 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் உரிய காலத்திற்குள் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு முடியாததன் காரணமாக அச்செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் மரபுரீதியான பயிர் இனவிருத்தி பிரிவினால் புதிய தென்னை இனங்களை அறிமுகப்படுத்துவது சம்பந்தமான ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தும் 2013 ஆம் ஆண்டின் பின்னர் புதிய தென்னை இனங்களை அறிமுகப்படுத்துதல் இடம்பெற்றிருக்கவில்லை. அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 06 தென்னை இனங்களுக்கு மத்தியில் கப்ருவன, கப்செத, கப்சுவய ஆகிய தென்னை இனங்கள் மக்களுக்கு மத்தியில் வியாபித்திருக்கவில்லை.

(உ) தென்னை வண்டுகளின் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்குத் தேவையான எதிர்ப்பு வண்டு பக்கட்டுக்களை உற்பத்தி செய்வதற்கு முடியாமை மற்றும் உயரமான தென்னை மரங்களுக்கு எதிர்ப்பு வண்டுகள் பக்கட்டுக்களை போடுவதற்கான முறைமை தயார்படுத்தப்படாமையின் காரணமாக கடந்த 5 ஆண்டுகளுள் சபைக்குச் சொந்தமான 10 தென்னந் தோட்டங்களில் 2013 ஆம் ஆண்டின் போது வண்டு பாதிப்புக்களுக்கு உள்ளாகிய 342,051 தேங்காய்களின அளவு மீளாய்வாண்டின் போது 467,034 தேங்காய்கள் வரை 36 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தென்னை ஆராய்ச்சி சபையால் கண்டுபிடிக்கப்பட்ட தேசிய ரீதியாக முக்கியத்துவமான ஆராய்ச்சி விளைவுகளை ஏனைய நாடுகளுடன் பரிமாற்றம் செய்வது சம்பந்தமாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் அமைச்சரவையின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் சபையினால் அவ்வாறு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது இந்திய வெளிநாட்டுக் கம்பனியுடன் நார் பயிரிடல் தொழில்நுட்பத்தின் ஆராய்ச்சி ரீதியான விளைவுகள் பரிமாற்றம் செய்யப்பட்டிருந்தன.

(ஆ) மாகந்துர அறிவு வள நிலையத்தை விதைத் தேங்காய் பூங்காவாக 1984 யூலை 21 ஆந் திகதியிலிருந்து ஸ்தாபிக்கப்பட்டிருந்தும் தென்னை மரங்கள் முதிர்ச்சியடையாத நிலைக்கு மாறியுள்ளதன் காரணமாக விதைத் தேங்காய்களைப் பெற்றுக்கொள்ளுதல் நிறுத்தப்பட்டு இடைப்பயிர் மாதிரிப் பண்ணையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**4.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

தேங்காய் சிரட்டைக் கரி உற்பத்தியின் போது வெளியாகும் வெப்பத்தை சுற்றாடலுக்கு விடுவிக்காது அந்த வெப்பத்தை பயன்படுத்தி கொப்பரா உலர்த்தும் குறிக்கோளுடன் ரூபா 1,719,250 செலவு செய்து பண்டிருப்பு ஆராய்ச்சி நிலையத்தில் வெப்பத்தை காக்கும் பிரிவு 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளாததன் காரணமாக அது 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

சபையின் அங்கீகரித்த பதவியணியினர் 391 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 287 ஆக இருந்ததுடன் 31 பதவிகளுக்காக 104 வெற்றிடங்கள் காணப்பட்டது. அதற்கிணங்க அங்கீகரித்த பதவியணியினர் எண்ணிக்கையில் 27 சதவீதம் அளவில் வெற்றிடமாகக் காணப்பட்டமை சபையின் நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்கு தடையாக இருந்தது.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்துகொள்ளல்**

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டீபி/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயலாளரால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிரந்தர அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தாலும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் எனினும் மீளாய்வாண்டு தொடர்பாக தென்னை ஆராய்ச்சி சபையால் தமது

நோக்கெல்லையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள செயற்பாடுகள் சம்பந்தமாக எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அதிகாரசபையால் இனங்காணப்பட்ட நடவடிக்கைகள் வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏதும் நடவடிக்கைகளின் சரியான செயலாற்றலை அளவீடு செய்வதற்காக சரியான தரவு அடிப்படை காணப்படுதல் அத்தியாவசியமான போதிலும் அதிகாரசபையால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதனை அளவீடு செய்வதற்காக சரியான தரவு அடிப்படையை ஏற்படுத்திக் கொள்வதற்கு நடடிவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கண்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது அவதானத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் சம்பந்தமாக விசேட அவதானம் எடுத்தல் வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) கணக்கீடு | | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்படுதல் மற்றும் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்படாமை. |
| (ஆ) பதவியணியினர் நிர்வாகம் | i | நிறுவனத்தில் காணப்படும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | ii | உத்தியோகத்தர்களை பதவிகளுக்குச் சேர்த்துக் கொண்டதன் பின்னர் அவர்களின் கல்வித் தகைமைகள் மற்றும் தொழில் சார் தகைமைகளுக்குரிய சான்றிதழ்களின் சரியான தன்மையை அந்த நிறுவனங்களிலிருந்து உறுதிப்படுத்திக்கொள்ளாமை. |
| (இ) சொத்துக்கள் முகாமைத்துவம் | | தேங்காய் விளைச்சலை அதிகரிப்பதற்கும் புதிய தென்னை இனங்களை அறிமுகப்படுத்துவதற்கும் மற்றும் தென்னை பயிர்களை சேதப்படுத்துகின்ற கிருமிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்காமை. |